**எல்லாம் நாடக மேடை ! இளையர்களுக்கு மட்டும்!**
**நாள்: 08 மார்ச் 2008 சனிக்கிழமை**
**நேரம்: பிற்பகல் 2 மணியிலிருந்து 4 மணிவரை**
**இடம் : அங் மோ கியோ நூலக நிகழ்ச்சி அரங்கம்**

*மேடை நாடகங்கள் எழுதி உங்கள் தமிழ் எழுத்துத் திறனை வளர்த்துக் கொள்ள ஓர் அரிய வாய்ப்பு!*

தமிழ் ஓர் இனிமை மிகுந்த மொழி என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. ஆனால் இவ்வுலகெங்கும் ஆங்கில மொழியின் புழக்கம் அதிகரித்து வருவாதாலோ என்னவோ நம்மில் பலருக்கு சிறந்த தமிழில் கட்டுரைகளையோ கதைகளையோ கவிதைகளையோ எழுதும்போது நம் கற்பனா சக்தியை உயரப் பறக்கவிட முடிவதில்லை. குறிப்பாக நமது தமிழாசிரியர்கள் நம்மைப் பேனாவைப் பிடித்து நம் எண்ணங்களை வெளிக்காட்டச் சொல்லும்போது "அய்யயோ! என்னத்தான் எழுதுவது! எப்படி எழுதுவது!" என்று ஓர் தீடீர் குரலோசை மனதுக்குள் எழும்பிவிடும்!

நம் ஒவ்வொருவருக்குள் ஒளிந்து கிடக்கும் எழுத்து திறன்களை வெளியேற்ற உதவும் வகையில் நாம் அனைவரும் நன்கறிந்த **ரவீந்திரன் நாடகக் குழு** வழங்கும்
இவ்வெழுத்துப் பட்டறை அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மேடை நாடகங்களுக்கு புதுமைத்துவம் வாய்ந்த கதைகளை வடிவமைத்து அவை மூலம் அந்நாடகங்களை எவ்வாறு மேடையில் சித்தரிக்கலாம் அல்லது நடித்துக் காட்டலாம் என்பதை வெளிக்காட்டும் இப்பயன்மிகு பட்டறையில் நீங்களும் கலந்து
கொண்டு மகிழவும்!

தமிழ் இனிய மொழி மட்டுமல்ல அது நவரசங்களையும் மிக அழகாகச் சித்தரிக்கக் கூடிய மொழி என்பதை நீங்கள் அறிந்துக் கொள்ள இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!

**அனுமதி இலவசம்!**